செய்தி வெளியீடு எண். 213 நாள்: 20.04.2017

**திருவள்ளூர் மாவட்டம், அம்மா திட்டம் 21.04.2017 அன்று நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

~~~~~

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி அனைத்து கிராமத்திலும் அடித்தட்டு மக்களுக்கு அதிக சேவையை வழங்கும் திட்டமான அம்மா திட்டம் (AMMA - Assured Maximum Service to Marginal People in All Villages) திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள 1 வட்டாட்சியரின் தலைமையில் கீழ்கண்ட வருவாய் கிராமங்களில் 21.04.2017 (வெள்ளிக்கிழமை) அன்று காலை 10.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெற உள்ளது.

இதில் வருவாய்த் துறையின் முதியோர் ஓய்வூதியம் உள்ளிட்ட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், பட்டா மாறுதல், இலவச வீட்டுமனை பட்டாக்கள், உழவர் பாதுகாப்பு அட்டை, பிறப்பு இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ், குடும்ப அட்டை, குடிநீர் பிரச்சனைகள், நிலம் சம்மந்தமான பிரச்சனைகள் குறித்து கோரிக்கை மனுக்களாக அளிக்கலாம். இக்கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு தகுதியான நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் அன்றைய தினமே வழங்கப்பட உள்ளது. மேலும் உடனடி தீர்வு காணமுடியாத மனுக்கள் மீது தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டு 30 நாட்களுக்குள் உரிய தீர்வு காணப்படும். அம்மா திடடம் நடைபெறும் இடங்களில் மருத்துவத்துறை மூலம் முகாம் நடத்தவும், பெண் குழந்தை பிறப்பை தடுத்தல், பெண் சிசுக்கொலையை தடுத்தல் போன்ற விழிப்புணர்வு பதாகைகளை பொது மக்கள் நன்கு அறியும் வண்ணம் அமைக்கும்படியும், கால்நடை பராமரிப்புத்துறை மற்றும் அனைத்துத்துறை தலைமை அலுவலர்களும் இம்முகாம்களில் பங்குகொண்டு, பொது மக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் குறித்து எடுத்துரைக்கவும், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்), திட்ட அலுவலர் (மகளிர் திட்டம்), விவசாயத்துறை, தோட்டக்கலைத்துறை போன்ற அனைத்துத் துறை அலுவலர்களும் அம்மா திட்டத்தில் கலந்து கொண்டு பொது மக்களுக்கு சேவை செய்ய வருகை புரிகிறார்கள் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ,ஆ,ப,. அவர்கள் தெரிவிக்கிறார்.

**அம்மா திட்டம்**
**21.04.2017 (வெள்ளிக்கிழமை)**

| வ. எண் | வட்டத்தின் பெயர் | அம்மா திட்டம் நடைபெறும் கிராமத்தின் பெயர் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | பொன்னேரி | ஆமூர் -2 மாலிவாக்கம் கிராமம் | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி அருகில் உள்ள காலி இடத்தில். |

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~